Private E-Sevai Center
CSC Center
STAR RAINBOW SERVICES
VADAPALANI
8144337349

தமிழ் மக்கள் குரல்
தினசரி காலை நாளிதழ்
tamilmakkalkurall@gmail.com
RNI No. : TNTAM24840
உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Tamilnadu Association For The Rights of All Types of Differently Abled and Caregivers - TARATDAC
Contact :
98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | செவ்வாய், டிசம்பர் 31, 2024 | இதழ் 262

# ஆங்கில புத்தாண்டு: தமிழக முதல்வர் ஸ்டாலின், எதிர் கட்சி தலைவர் எடப்பாடி உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து

## நல்வரவு 2025
## தமிழ் மக்கள் குரல்-ன்
### இனிய ஆங்கில புத்தாண்டு வாழ்த்துகள்

சென்னை, 31 டிசம்பர் 2024: நாளை ஆங்கில புத்தாண்டு (2025) பிறக்கிறது. இதனையொட்டி முதலமைச்சர் ஸ்டாலின், எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிசாமி மற்றும் தலைவர்கள் வாழ்த்து தெரிவித்திருக்கிறார்கள்.

நாளை கோலாகலமாக புத்தாண்டு கொண்டாடப்படுகிறது.

இதனையொட்டி தமிழகம் முழுவதும் 1 லட்சம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். சென்னையில் 19 ஆயிரம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

கடலில் குளிப்பதற்கும், பட்டாசு வெடிப்பதற்கும் போலீசார் தடை விதித்திருக்கிறார்கள்.

தேவாலயங்களில் இன்று இரவு பழைய ஆண்டுக்கு (2024) விடை கொடுத்தும், புதிய (2025) ஆண்டை வரவேற்று பிரார்த்தனைகள் நடைபெறுகின்றன.

இன்று நள்ளிரவு முதல் இந்து கோவில்களில் சிறப்பு வழிபாடுகள் நடைபெறுகின்றன. இதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. பக்தர்கள் கூட்டம் நள்ளிரவு முதல் அதிகமாக இருக்கும் என்பதால் கியூவில் நின்று செல்ல வசதியாக சவுக்கு கட்டை தடுப்புகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

புத்தாண்டையொட்டி முதல்வர், எதிர்க்கட்சி தலைவர், கட்சி தலைவர்கள் பலரும் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள ஆங்கிலப் புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் கூறியிருப்பதாவது:

இந்திய ஜனநாயகத்தின் மீதான நம்பிக்கையை மீட்ட 2024 நிறைவுற்று, புத்தாண்டு 2025 பிறக்கிறது.

தமிழ்ப்புதல்வன், ஊரகப் பகுதிகளில் மக்களுடன் முதல்வர், நீங்கள் நலமா, கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்கும் திட்டம், முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் விரிவாக்கம், அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் மாணவிகளுக்கும் புதுமைப் பெண் திட்டம் விரிவாக்கம், கலைஞர் கைவினைத்திட்டம், "ஊட்டச்சத்தை உறுதி செய்" திட்டத்தின் இரண்டாம் கட்டம்,

2 கோடிப் பயனாளிகளைக் கடந்த மக்களைத் தேடி மருத்துவம், 500 கோடிக்கும் அதிகமான கட்டணமில்லாப் பயணங்கள் செய்யப்பட்டுள்ள விடியல் பயணம் திட்டம், இந்திய அளவில் பாராட்டுகளைப் பெற்று வரும் "நான் முதல்வன்" திட்டம், மகளிரின் பொருளாதாரத் தன்னிறைவை நோக்கிய கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தில் 1.48 லட்சம் பேருக்கு கூடுதலாக விரிவாக்கம், அத்திக்கடவு அவிநாசி திட்டம் என 2024 ஆண்டு தமிழ்நாட்டில் நமது திராவிட மாடல் அரசின் தொடர் சாதனைப் பயணம் புதிய பாய்ச்சல்களை நிகழ்த்திக் காட்டியுள்ளது.

இந்தச் சாதனைகளை உச்சி முகர்ந்து அங்கீகரிக்கிறோம் எனக் கூறும் விதமாகத்தான் 2024 நாடாளுமன்றத் தேர்தலில் "நாற்பதுக்கு நாற்பது" என இந்தியாவே திரும்பிப் பார்க்கும் வெற்றி மகுடம் சூட்டினர் நம் மக்கள். தமிழ்நாடும், புதுச்சேரியும் அளித்த அந்த மாபெரும் வெற்றிதான் இந்தியாவில் மதச்சார்பின்மைக்கான குரல் இன்னும் உயிர்ப்போடு ஒலித்துக் கொண்டிருக்க - தொடர்ந்து நிலைத்து நிற்க மிக முக்கியக் காரணமாக அமைந்துள்ளது.

அந்த வகையில் விடுதலை இந்திய வரலாற்றில் ஜனநாயகத்தை பாதுகாத்து- இந்நாட்டின் பெருமையை நிலைநாட்ட, தமிழ்நாடு மக்கள் அளித்த வெற்றிக்குரிய 2024- ம் ஆண்டு - மறக்க முடியாத ஆண்டாக அமைந்துவிட்டது. சோதனைகள், தடங்கல்களைக் கடந்து சாதனைகள் படைக்கவும், வெற்றி பெறவுமான நம்பிக்கையினையும் உத்வேகத்தினையும் அளித்தது 2024-ஆம் ஆண்டு.

புத்தாண்டாகிய 2025- ல் உலகெங்கும் அமைதி திரும்பட்டும். நம் நாட்டில் சமூக நல்லிணக்கம் தழைத்துச் செழித்தோங்கட்டும். இல்லந்தோறும் அன்பும் மகிழ்ச்சியும் நிறைந்திருக்கட்டும். தமிழ்நாடு அதற்கு வழிகாட்டும். அனைவருக்கும் எனது உளம் நிறைந்த ஆங்கிலப் புத்தாண்டு நல்வாழ்த்துகள்!

இவ்வாறு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் கூறியுள்ளார்.

ஆங்கிலப் புத்தாண்டை முன்னிட்டு அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளரும், முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியிருப்பதாவது:

புத்தம் புது நம்பிக்கைகளுடன் மலருகின்ற இந்தப் புத்தாண்டில், தமிழக மக்கள் அனைவருக்கும் என் இனிய ஆங்கிலப் புத்தாண்டு நல்வாழ்த்துகளை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அண்ணா தி.மு.க. ஆட்சிக் காலங்களில், மக்கள் நலன் ஒன்றை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு பல்வேறு முத்தான திட்டங்கள் செயல்படுத்தப்பட்டதோடு, மக்கள் எவ்வித அச்சமுமின்றி நிம்மதியுடன் வாழ்ந்து வந்ததை, இந்த நேரத்தில் பெருமிதத்தோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

தமிழ்நாட்டில் அனைத்து நிலைகளிலும் வாழும் மக்கள் நிம்மதியான வாழ்க்கையை வாழ்வதற்கான சூழலை ஏற்படுத்துவதற்கு, நாம் அனைவரும் ஒன்றுபட்டு நிற்போம். ஓயாது உழைப்போம். பொற்கால ஆட்சியை தமிழ் நாட்டில் மீண்டும் அமைப்போம் என இந்நாளில் சபதமேற்போம்.

மக்கள் அனைவருக்கும் இந்தப் புத்தாண்டு, புதிய நம்பிக்கையையும், எழுச்சியையும், மலர்ச்சியையும், வளர்ச்சியையும் வழங்கும் ஆண்டாக மலரட்டும் என்று, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., புரட்சித் தலைவி அம்மா ஆகியோரது தூய வழியில் மனதார வாழ்த்தி, அனைவருக்கும் எனது உளங்கனிந்த ஆங்கிலப் புத்தாண்டு நல்வாழ்த்துகளை மீண்டும் ஒருமுறை உரித்தாக்கிக்கொள்கிறேன்.

இவ்வாறு எடப்பாடி பழனிசாமி கூறியுள்ளார்.

பா.ம.க நிறுவனர் மருத்துவர் ராமதாசு வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில் கூறியிருப்பதாவது:

மாற்றத்திற்கும், மகிழ்ச்சிக்கும் வழிவகுக்கக் கூடிய 2025 ம் ஆண்டை வரவேற்று கொண்டாடும் தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் இனிய ஆங்கில புத்தாண்டு நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன். ஒவ்வொரு புத்தாண்டும் எல்லையில்லாத நம்பிக்கைகளுடன் தான் பிறக்கின்றன. ஆனால், அந்த ஆண்டின் நிறைவு சோதனைகளுடன் தான் முடிகிறது. நம்பிக்கை தான் வாழ்க்கை. கடந்த சில ஆண்டுகளின் துயரங்கள் அனைத்தும் துடைத்தெறியப்படும்; அனைத்து துறைகளிலும் இதுவரை இல்லாத முன்னேற்றங்கள் எட்டப்படும் என்ற நம்பிக்கையுடன் புதிய ஆண்டை வரவேற்போம். புத்தாண்டு நமக்கு மகிழ்ச்சியை, மட்டற்ற மகிழ்ச்சியை மட்டுமே அளிக்கும்; ஏமாற்றங்களை முழுமையாக விரட்டியடிக்கும்.

தமிழ்நாட்டில் இப்போது நிலவும் கொலைத் தொழில் ஆட்சி அகற்றப்படுவதற்கு 2025 ம் ஆண்டு வலிமையான அடித்தளம் அமைக்க வேண்டும்.

நாம் எதிர்பார்ப்பது நிச்சயம் நடக்கும். 2025 ம் ஆண்டு நாம் எதிர்பார்த்ததைப் போலவே இனிப்பாக அமையும். அனைவருக்கும் அனைத்து நலன்களும், வளங்களும் கிடைக்கும்; பொருளாதாரம் வளரும்; மகிழ்ச்சி பெருகும்; அமைதியும், நிம்மதியும் கிடைக்கும்; அவற்றை சாதிக்க நாம் கடுமையாக உழைப்போம் என்று கூறி மீண்டும் ஒருமுறை புத்தாண்டு வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில் கூறியிருப்பதாவது:

மலரும் ஆங்கிலப் புத்தாண்டை மலர்ச்சியுடனும், மகிழ்ச்சியுடனும் கொண்டாடும் இந்த இனிய நாளில், தமிழக மக்கள் அனைவருக்கும் எனது ஆங்கிலப் புத்தாண்டு நல்வாழ்த்துகளை மன மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

வன்முறை, பாலியல் பலாத்காரம், கொலை, கொள்ளை, கள்ளச் சாராயம், போதைப் பொருட்கள் நடமாட்டம் ஆகியவை ஒழிக்கப்பட்டு, அமைதி, வளம் வளர்ச்சி என்ற பாதையில் தமிழ்நாட்டைச் அழைத்துச் சென்று, தமிழ்நாடு இந்தியாவிற்கே முன்மாதிரியாக விளங்கிட வேண்டும் என்ற லட்சியத்தை அடைய நாம் அனைவரும் பாடுபட வேண்டும். அப்பொழுதுதான், அமைதியான சூழலில் வளமான வாழ்வு பெற்று அனைத்து மக்களும் முன்னேற்றம் காண முடியும்.

வருகின்ற புத்தாண்டு அனைத்து மக்களின் வாழ்க்கையை வளமாக்கும் ஆண்டாக, துன்பங்கள் கரைந்து இன்பங்கள் நிறையும் ஆண்டாக, தோல்விகள் தேய்ந்து வெற்றிகள் பெருகும் ஆண்டாக, தடைகளைத் தகர்த்தெறியும் ஆண்டாக, கனவுகள் நனவாகும் ஆண்டாக எல்லையில்லா மகிழ்ச்சியை தரும் ஆண்டாக, மாற்றத்தினை உருவாக்கும் ஆண்டாக மலரட்டும் என்ற என்னுடைய அவாவினைத் தெரிவித்து, அனைவருக்கும் என்னுடைய புத்தாண்டு நல்வாழ்த்துகளை மீண்டும் ஒருமுறை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

தமிழக காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில், பிறக்கப்போகிற 2025 ஆங்கில புத்தாண்டில் இந்தியாவில் ஜனநாயகம் தழைக்கவும், மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்கிற வகையிலும், மக்களவை எதிர்கட்சித் தலைவர் ராகுல்காந்தி எடுத்து வருகின்ற முயற்சிகள் வெற்றி பெற வேண்டுமென மக்கள் எதிர்பார்க்கிறார்கள். இதன்மூலம் மக்களின் வாழ்வு ஏற்றம் பெற்று, ஒளிமயமான எதிர்காலம் அமைய அனைவருக்கும் தமிழ்நாடு காங்கிரஸ் சார்பாக ஆங்கில புத்தாண்டு வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

பா.ம.க. தலைவர் அன்புமணி ராமதாஸ் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில் கூறியிருப்பதாவது:

மக்களின் துயரங்கள் விலகி மகிழ்ச்சி மலர அனைவருக்கும் புத்தாண்டு வாழ்த்துகள்.

சோர்ந்து கிடப்பவர்களுக்கு நம்பிக்கையையும், உறுதியையும் வழங்கும் ஆங்கிலப் புத்தாண்டு பிறப்பை கொண்டாடும் சொந்தங்கள் அனைவருக்கும் இதயங்கனிந்த வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் நலன்கள், உரிமைகள் ஆகியவற்றின் மீது படிந்த இருள் விலகி, ஒளி பிறக்க ஆங்கிலப் புத்தாண்டு வகை செய்யட்டும். புத்தாண்டில் தமிழ்நாட்டு மக்களுக்கு அனைத்து நலன்களும், வளங்களும், மகிழ்ச்சி, வளர்ச்சி, அமைதி, மனநிறைவு, நல்லிணக்கம், சகோதரத்துவம் உள்ளிட்ட அனைத்தும் கிடைக்க வேண்டும் என்று கூறி, மீண்டும் ஒருமுறை ஆங்கிலப் புத்தாண்டு நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

கன்னியாகுமரி பாராளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில்,

உங்கள் வாழ்வில் புதுவசந்தம் நிறைந்து இந்த புது வருடம் உங்களுக்கு பூரிப்பை அளிக்க வேண்டும்.

ஒவ்வொரு புது வருடமும் நமது வாழ்வில் புது நம்பிக்கையை தருகிறது. கடந்த ஆண்டு நாம் சந்தித்த தடைகள் மற்றும் சோதனைகளை கடந்து புது வருடத்திற்குள் காலடி எடுத்து வைக்கிறோம். இந்த வருடம் மிகவும் சிறப்பாகவும், வெற்றிகரமாகவும் அமைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகிறேன். நலம், இன்பம், தனம் நிறைந்த புத்தாண்டாக 2025 அமையட்டும்

உங்கள் தனிப்பட்ட வாழ்வில் வெற்றிகள் உங்களை தேடி வரட்டும். உங்கள் இல்லங்களில் மகிழ்ச்சியும், ஆரோக்கியமும் நிரம்பி வழியட்டும். சமூகத்தில் சகோதரத்துவம் மலர்ந்து, பகைகள் மறைந்து அமைதி நிலவிட வாழ்த்துகிறேன் என்றார்.

கோகுல மக்கள் கட்சியின் நிறுவனர் தலைவர் எம்.வி.சேகர் வெளியிட்டுள்ள வாழ்த்து செய்தியில்,

2024 ம் ஆண்டு பல்வேறு நன்மைகள்- இழப்புகள் - எதிர்பார்ப்புகளுடன் கடந்து விட்டது. தமிழக அரசியல் களத்தில் ஏராளமான மாற்றங்கள் ஏற்பட்டு புதிய மாற்றங்களை தமிழக மக்கள் எதிர்கொண்டு வருகின்றனர். புதிதாக பல அரசியல் கட்சிகள் களத்தில் இறங்கியுள்ள நிலையில், கோகுல மக்கள் கட்சி வழக்கம் போல் தனது கடமைகளை நிறைவேற்றி, இலட்சிய வேட்கையோடு மக்கள் பணியாற்றி வருவது மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்துகிறது.

நூற்றாண்டு கால அரசியல், பொதுவெளி இடைவெளிகளில் சமூகத்தை மீட்டெடுத்து, எதிர்கால சந்ததியினரின் கல்வி, வேலைவாய்ப்பு, வாழ்வாதாரங்களை உறுதி செய்வதோடு, நமக்கான அரசியல் அங்கீகாரத்தை எட்டும் லட்சியத்தை அடைவதில் கோகுல மக்கள் கட்சி தனது கடமைகளை சிறப்புற ஆற்றும் என உறுதி கூறுகிறேன்.

அதுமட்டுமின்றி, தகவல் தொழில்நுட்பம், அறிவியல் உள்பட பல துறைகளிலும் நமது இளைஞர்களை முன்னேற்றி, எதிர்கால தேவைகள் - லட்சியங்களை நிறைவேற்றும் வகையில், இளைய தலைமுறையினரை நம்முடன் ஒருங்கிணைத்து லட்சியப் பாதையில் பயணிப்போம். அனைவருக்கும் இனிய ஆங்கில புத்தாண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.




PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி

செவ்வாய், டிசம்பர் 31, 2024

# மாணவி பாலியல் வன்கொடுமை
# யார் அந்த 'சார்'? எடப்பாடி மீண்டும் கேள்வி
# சிபிஐ விசாரணைக்கு உத்தரவிட தயக்கம் ஏன்?




சென்னை, 31 டிசம்பர் 2024: மடியில் கனம் இருப்பதால் தான் தி.மு.க.விற்கு பயம். அண்ணா பல்கலை மாணவி பாலியல் வழக்கை சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட வேண்டியது தானே? என எடப்பாடி பழனிசாமி கேள்வி எழுப்பி உள்ளார்.

சென்னை ராயப்பேட்டையில் அண்ணா தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:

அண்ணா பல்கலைக்கழக பாலியல் வன்கொடுமை சம்பவம் இந்திய அளவில் பேசப்பட்டு வருகிறது. அண்ணா பல்கலைகழக விவகாரத்தில் 3 பெண் ஐபிஎஸ் அதிகாரிகள் தலைமையில் குழு அமைத்து ஐகோர்ட் உத்தரவிட்டுள்ளது.

தமிழகத்தில் பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத சூழல் நிலவுகிறது. எப்.ஐ.ஆர். வெளியானது தவறான முன்னுதாரணம். எப்.ஐ.ஆர். வெளியானது எப்படி? உண்மை குற்றவாளிகள் தப்பித்து விட கூடாது என்பதற்காகவே அண்ணா தி.மு.க. போராட்டம் நடத்தியது. உண்மை குற்றவாளிகள் கைது செய்யப்பட வேண்டும் என்பதே அண்ணா தி.மு.க.வின் நோக்கம்.

காவல்துறை ஆணையருடன் முரண்பட்டு உயர்கல்வி அமைச்சர் பேசுகிறார். பாலியல் வன்கொடுமை விவகாரத்தில் இத்தனை அமைச்சர்கள் பேசுவதற்கு என்ன காரணம்.

எப்.ஐ.ஆரில் குறிப்பிடப்பட்டுள்ள அந்த சார் யார்? இது குறித்து போலீசார் இதுவரை விளக்கம் அளிக்கவில்லை. உண்மை குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும். வேண்டப்பட்ட நபரைக் காப்பாற்ற அமைச்சர்கள் வரிந்து கட்டிக்கொண்டு பேசுகின்றனர். ஆர்ப்பாட்டத்தின்போது கைது செய்யப்பட்ட அண்ணா தி.மு.க.வினர் கைது செய்யப்பட்டது கண்டிக்கத்தக்கது.

பொள்ளாச்சி பாலியல் வழக்கில் உடனடியாக சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட்டோம்.

பாலியல் வன்கொடுமை அடைந்த பெண்களுக்கு நீதி கிடைக்க மாநில அரசு வழிவகை செய்யவில்லை. மடியில் கனம் இருப்பதால் தான் தி.மு.க.விற்கு பயம். அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வழக்கை சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட வேண்டியது தானே?.

போராட்டம் நடத்துவோரை கைது செய்ய 1000 போலீசார் வருகின்றனர், பாலியல் விவகாரத்தில் இந்த வேகத்தை காட்டாதது ஏன்?

புதுக்கோட்டை ஆவுடையார் கோவிலில் செவிலியருக்கு பாலியல் வன்கொடுமை நடைபெற்றுள்ளது.தமிழகம் முழுவதும் பாலியல் வன்கொடுமை, பெண்களுக்கு பாதுகாப்பு இல்லாத நிலை ஏற்படுகிறது.

மாணவிகளுக்கு பாதுகாப்பு இல்லை. சிறுமிகளுக்கு பாதுகாப்பு இல்லை; மொத்தத்தில் தமிழகத்தில் யாருக்கும் பாதுகாப்பு இல்லை.

பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட பெண்கள் புகார் அளித்தாலும் போலீசார் நடவடிக்கை எடுப்பதில்லை.

கன்னியாகுமரியில் கண்ணாடி பாலம் திட்டத்திற்கு முதலில் கோரிக்கை விடுத்தது நான் தான். மத்திய அமைச்சர்கள் நிதின் கட்கரி, மன்சுக் மாண்டவியாவுடன் இந்த கோரிக்கையை வைத்தோம். இந்த திட்டம் அண்ணா தி.மு.க. ஆட்சியில் கொண்டு வரப்பட்டது. கொரோனா தொற்று காரணத்தினாலும், சுற்றுச்சூழல் அனுமதி பெற தாமதம் ஆனதாலும் நிறைவேறாமல் போனது. இவ்வாறு எடப்பாடி பழனிசாமி கூறினார்.

# சென்னை ஐகோர்ட்டில் நிர்வாகத்துறை புதிய கட்டிடம்:
# சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் சுந்தரேஷ், மகாதேவன் திறந்து வைத்தனர்



சென்னை, 31 டிசம்பர் 2024: சென்னை ஐகோர்டடில் நிர்வாகத்துறைக்கான 11 அடுக்குகளை கொண்ட புதிய கட்டிடங்களை சுப்ரீம் கோர்ட் நீதிபதிகள் எம்.எம். சந்தரேஷ், மகாதேவன் ஆகியோர் திறந்து வைத்தனர்.

சென்னையில் அடையாளங்களில் ஒன்றாக திகழும் பாரம் பரிய கட்டிடத் தில் இயங்கி வரும் சென்னை ஐகோர்ட்டில் நீதி மன்ற அறைகளுக்கு இணையாக நிர் வாகப் பிரிவுடன் கூடிய பல்வேறு அலுவலகப் பிரி வும் தனித்தனி அறைகளில் இயங்கி வந்தன. இதனால் ஏற்பட்ட இடநெருக் கடியை கருத் தில் கொண்டு நிர் வாகப் பிரிவுக்கென புதிய கட்டிடம் கட்ட முடிவு செய் யப் பட் டது.

அதன்படி, எஸ்பிளனேடு நுழைவுவா யில் பகுதி யில் 11 அடுக் கு மாடிகளுடன் கட்டப் பட்ட புதிய நிர் வாகப் பிரிவு கட்டிடத்தை உச்ச நீதி மன்ற நீதிப திகள் எம்.எம் .சுந் தரேஷ், ஆர்.ம காதேவன் ஆகியோர் நேற்று திறந்து வைத் தனர். அதன் பிறகு நடைபெற்ற விழா வில் முன் னாள் பிரதமர் மன்மோகன் சிங் மறைவுக்கு 2 நிமிடம் மவுன அஞ்சலி செலுத் தப் பட் டது.

நிகழ்ச்சியில் சென்னை ஐகோர்ட் தலைமை நீதிபதி கே.ஆர்.ராம் பேசியதாவது:

நீதித்துறை விரைந்து நீதி வழங்குவதற்காக நிர்வாகத்துறையின் செயல்பாடுகள் மிக முக்கியமானது. நீதித்துறையின் முதுகெலுப்பாக செயல்படும் நிர்வாகத்துறைக்கு சென்னை ஐகோர்ட்டில் போதுமான இடவசதி இல்லாத நிலை இருந்து வந்தது. அதற்காக தற்போது 11 மாடிகளை கொண்ட புதிய நிர்வாக கட்டிடம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய கட்டிடத்தில், வழக்கு ஆவணங்கள் பாதுகாப்பு, நீதித்துறைக்கான கணக்கு, வழக்கு அலுவலகங்கள், தபால் துறை உள்ளிட்ட நிர்வாகத்துறைக்கான அலுவலகங்கள் செயல்படும். சென்னை உயர் நீதிமன்றத்தில் கட்டி திறக்கப்பட்டுள்ள நிர்வாகத்துறைக்கான இந்த புதிய கட்டிடம் சாதாரண கட்டிடம் அல்ல. வருங்கால நீதிக்கான கட்டிடம். சமூகத்திற்கு நீதியை விரைந்து வழங்குவதில் இந்த புதிய கட்டிடம் முக்கிய பங்காற்றும். இந்த கட்டிடம் அமைவதற்கு உதவிய தமிழக அரசுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். பகவத் கீதை, திருக்குறளை மேற்கோள் காட்டி கருமேகங்கள் எந்தவித எதிர்பார்ப்பும் இல்லாமல் மழை பொழிவை கொடுத்து, இயற்கையை செழிக்க வைப்பது போல் நீதி வழங்கப்பட வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் சென்னை ஐகோர்ட் நீதிபதிகள் எஸ்.எஸ் சுந்தர், ஆர்.சுப்பிரமணியன், ஆர்.சுரேஷ்குமார், ஐகோர்ட் பதிவாளர் ஜெனரல் எஸ்.அல்லி, அட்வகேட் ஜெனரல் பி.எஸ்.ராமன், கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் ஏ.ஆர்.எல்.சுந்தரேசன், தமிழ்நாடு பார் கவுன்சில் தலைவர் பி.எஸ்.அமல்ராஜ், வழக்கறிஞர்கள் சங்க தலைவர் ஜி.மோகனகிருஷ்ணன், செயலாளர் ஆர்.கிருஷ்ணகுமார், பொருளாளர் ஜி.ராஜேஷ், பொதுப்பணித்துறை பொறியாளர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு மாடல்ஸ் அசோசியேஷன் சார்பில் "மேன் ஆப் தமிழ்நாடு" போட்டி
# சென்னை நேஷனல் இன்ஸ்டிட்யூட் ஆஃப் டெக்னாலஜி வளாகத்தில் நடைபெற்றது




சென்னை, 31 டிசம்பர் 2024: தமிழ்நாடு மாடல்ஸ் அசோசியேஷன் சார்பில் "மேன் ஆப் தமிழ்நாடு" போட்டி சென்னை நேஷனல் இன்ஸ்டிட்யூட் ஆஃப் டெக்னாலஜி வளாகத்தில் நடைபெற்றது. பாரம்பரிய சுற்று, பிட்னஸ் சுற்று, கார்ப்பரேட் நடை, கேள்வி பதில் என மூன்று பிரிவுகளாக நடந்த இந்த நிகழ்ச்சியில் 250க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இதில் 40 பேர் இறுதி போட்டிக்கு தகுதி பெற்றனர்.

தமிழகத்தில் முதல் முறையாக இந்த பிரத்யேக நடந்த ஆடவர் அழகுப் போட்டியில் மறைந்த விஜயகாந்த் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாளை ஒட்டி அஞ்சலி செலுத்தப்பட்டது. இந்த நிகழ்ச்சியை மேன் ஆப் தமிழ்நாடு சீஈஓ மற்றும் மாடல்ஸ் அசோசியேஷன் தலைவர் வினோத் ஒருங்கிணைத்தார். இதில் வெற்றி பெற்ற நஸ்ருதீன், மனோஜ் அகில், ஆனந்த கிருஷ்ணன் ஆகியோர் பிலிப்பைன்ஸ், துபாய், மலேசியா, வியட்நாம் ஆகிய நாடுகளில் நடக்கும் சர்வதேச ஆடவர் அழகு போட்டியில் பங்கேற்க உள்ளனர்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் தொழில்துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு மாநில தலைவர் திரு. ஏ.எம். விக்கிரமராஜா, தமிழ்நாடு மாநில தகவல் ஆணையர் திரு. டாக்டர் எம்.செல்வராஜ், டெர்பி ஜீன்ஸ் சிஇஓ திரு. விஜய் கபூர், 2024 ருபாரு மிஸ்டர் இந்தியா திரு.முஷ்தாக், இளம் தொழில்முனைவோர் கூட்டமைப்பு, மாநில தலைவர் திரு. ஆனந்த், நடிகைகள் செல்வி.ஷகிலா, செல்வி.வர்ஷினி, திருமதி.அனுரேயா ராமன், செல்வி.வெண்மதி, நடிகர்கள் திரு.மேத்யூ வர்கீஸ், திரு.அசோக் குமார், திரு.திலீப் குமார், திரு.பிரதீப், பிஆர்ஓ திரு.சக்தி சரவணன், பிக்பாஸ் பிரபலம் நிரூப் நந்தகுமார் ஆகியோர் பங்கேற்றனர்.

# டி.என்.பி.எல். கிரிக்கெட் அணிகளில் அஸ்வின், சாய் சுதர்சன் உள்பட 39 வீரர்கள் தக்கவைப்பு



சென்னை, 31 டிசம்பர் 2024: டி.என்.பி.எல். கிரிக்கெட் அணிகளில் அஸ்வின், சாய் சுதர்சன், அபிஷேக் தன்வர் உள்பட 39 வீரர்கள் தக்க வைக்கப்பட்டுள்ளனர்.

8 அணிகள் பங்கேற்கும் 9-வது தமிழ்நாடு பிரிமீயர் லீக் (டி.என்.பி.எல்.) 20 ஓவர் கிரிக்கெட் போட்டி ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் நடக்கிறது. இதையொட்டி ஒவ்வொரு அணியும் அதிகபட்சமாக 5 வீரர்கள் தக்க வைக்க அனுமதி அளிக்கப்பட்டு இருந்தது. இதன்படி ஒவ்வொரு அணியும் தக்கவைத்த வீரர்களின் பட்டியலை தமிழ்நாடு கிரிக்கெட் சங்கம் நேற்று வெளியிட்டது.

4 முறை சாம்பியனான சேப்பாக் சூப்பர் கில்லீஸ் அணி ஆல்-ரவுண்டர் அபிஷேக் தன்வரை ரூ.12 லட்சத்துக்கும், பாபா அபராஜித்தை ரூ. 8 லட்சத்துக்கும், என்.ஜெகதீசனை ரூ.6 லட்சத்துக்கும், லோகேஷ் ராஜ், சிலம்பரசன் ஆகியோரை தலா ரூ.2.4 லட்சத்துக்கும் தக்கவைத்துள்ளது.

நடப்பு சாம்பியன் திண்டுக்கல் டிராகன்ஸ் அணி சுழற்பந்து வீச்சாளர் ஆர்.அஸ்வின் (ரூ.16 லட்சம்), வருண் சக்ரவர்த்தி (ரூ.12 லட்சம்), சந்தீப் வாரியர் (ரூ.8 லட்சம்), பாபா இந்திரஜித் (ரூ.6 லட்சம்), ஷிவம் சிங் (ரூ.2.4 லட்சம் ) ஆகியோரை வைத்து விட்டு மற்ற வீரர்களை விடுவித்துள்ளது.

இதே போல் திருச்சி கிராண்ட்சோழாஸ் அணியில் சஞ்சய் யாதவ் (ரூ.6 லட்சம்), ஜாபர் ஜமால் (ரூ.2.4 லட்சம்), ராஜ்குமார் (ரூ.2.4 லட்சம்), வாசீம் அகமது (ரூ.2.4 லட்சம்), அதிசயராஜ் டேவிட்சன் (ரூ.2.4 லட்சம்), திருப்பூர் தமிழன்ஸ் அணியில் சாய் கிஷோர் (ரூ.16 லட்சம்), டி.நடராஜன் (ரூ.12 லட்சம்), துஷர் ரஹேஜா (ரூ.8 லட்சம்), முகமது அலி (ரூ.6 லட்சம்), அமித் சாத்விக் (ரூ.2.4 லட்சம்), கோவை கிங்ஸ் அணியில் ஷாருக்கான் (ரூ.16 லட்சம்), சாய் சுதர்சன் (ரூ.12 லட்சம்), எம். சித்தார்த் (ரூ.8 லட்சம்), சச்சின் (ரூ.6 லட்சம்), ஜதாவேத் சுப்ரமணியன் (ரூ.2.4 லட்சம்), நெல்லை ராயல் கிங்ஸ் அணியில் சோனு யாதவ் (ரூ.16 லட்சம்), அருண் கார்த்திக் (ரூ.12 லட்சம்), அஜிதேஷ் (ரூ.8 லட்சம்), ரித்திக் ஈஸ்வரன் (ரூ. 6 லட்சம்), ஹரிஷ் (ரூ.2.4 லட்சம்), மதுரை பாந்தர்ஸ் அணியில் முருகன் அஸ்வின் (ரூ.8 லட்சம்), குர்ஜப்னீத் சிங் (ரூ. 6 லட்சம்), சரவணன் (ரூ.2.4 லட்சம்), சதுர்வேத் (ரூ.2.4 லட்சம்), சேலம் ஸ்பார்டன்ஸ் அணியில் அபிஷேக் (ரூ.2.4 லட்சம்), சன்னி சந்து (ரூ.2.4 லட்சம்), விவேக் (ரூ.2.4 லட்சம்), ஹரிஷ்குமார் (ரூ.2.4 லட்சம்), பொய்யாமொழி (ரூ.2.4 லட்சம்) ஆகியோர் நீடிக்கிறார்கள்.

இந்திய அணிக்காக சர்வதேச போட்டிகளிலும், மாநில அணிக்காக விஜய் ஹசாரே, ரஞ்சி, முஷ்டாக் அலி போன்ற போட்டிகளிலும் விளையாடிய வீரர்களுக்கு தக்கவைப்பதில் முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ளது. இந்திய கிரிக்கெட் வாரியம் நடத்திய எந்த போட்டிகளிலும் ஆடாதவர்கள் உள்ளூர் வீரர்களாக கருதப்பட்டு, அவர்களுக்கு ரூ.2.4 லட்சம் ஊதியம் நிர்ணயிக்கப்பட்டு இருக்கிறது.

அணியில் இருந்து வெளியேற்றப்பட்ட மற்றும் டி.என்.பி.எல்.-ல் புதிதாக விளையாட விரும்பும் வீரர்கள் தங்களது பெயரை ஜனவரி 30-ந்தேதிக்குள் www.tnca.cricket மற்றும் www.tnpl.cricket ஆகிய இணையதளத்தில் பதிவு செய்து கொள்ளலாம். வீரர்களின் மெகா ஏலம் பிப்ரவரி 15, 16-ந்தேதிகளில் நடக்கிறது.

ஏலத்தில் ஒவ்வொரு அணியும் ரூ.80 லட்சம் செலவிட அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. இதில் தக்க வைத்துள்ள வீரர்களுக்குரிய ஊதியம் போக மீதமுள்ள தொகையை வைத்து தான் எஞ்சிய வீரர்களை எடுக்க முடியும்.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

# ஆஹா ஃபைண்ட் - புரொடியூசர் பஜார் - சங்ககிரி ராஜ்குமார் கூட்டணியின் 'பயாஸ்கோப்' படத்தின் பத்திரிகையாளர் சந்திப்பு



சென்னை, 31 டிசம்பர் 2024: சங்ககிரி ராஜ்குமார் இயக்கத்தில் உருவாகி இருக்கும் 'பயாஸ்கோப்' திரைப்படத்தில் சத்யராஜ், சேரன், சங்ககிரி ராஜ்குமார், சங்ககிரி மாணிக்கம் உள்ளிட்ட பலர் நடித்திருக்கிறார்கள். மேலும் இந்த உண்மை கதையில் அசலான கதை மாந்தர்களே அவரவர் வேடங்களில் நடித்திருக்கிறார்கள். முரளி கணேஷ் ஒளிப்பதிவு செய்திருக்கும் இப்படத்திற்கு தாஜ்நூர் இசையமைத்திருக்கிறார். இந்தத் திரைப்படத்தின் வெளியீட்டில் புரொடியூசர் பஜார் நிறுவனத்துடன் சங்ககிரி ராஜ்குமாரும் இணைந்திருக்கிறார்.

'பயாஸ்கோப்' திரைப்படத்தின் பத்திரிகையாளர் சந்திப்பும், 'ஆஹா ஃபைண்ட்' டிஜிட்டல் தளத்தின் தொடக்க விழாவும் சென்னையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ஆஹா டிஜிட்டல் தளத்தின் தலைமை நிர்வாக அதிகாரி ரவிகாந்த், ஆஹா தமிழ் உள்ளடக்கம் மற்றும் வியூகங்கள் பிரிவின் மூத்த துணை தலைவர் கவிதா ஜௌபின், புரொடியூசர் பஜார் நிறுவனத்தின் தலைமை நிர்வாக அதிகாரி ஜி.கே. திருநாவுக்கரசு, இணை நிறுவனர் விக்ரம், தொழிலதிபர் அதியமான், இயக்குநர் சங்ககிரி ராஜ்குமார் , இசையமைப்பாளர் தாஜ்நூர் ஆகியோருடன் சிறப்பு விருந்தினராக இயக்குநர் கே. பாக்யராஜ் கலந்து கொண்டார்.

ஆஹா தமிழ் பிரிவின் உள்ளடக்கம் மற்றும் வியூகங்கள் பிரிவின் மூத்த துணை தலைவர் கவிதா ஜௌபின் பேசுகையில், "ஆஹா தமிழ் அதன் தொடக்க தினத்திலிருந்து புதிய முயற்சிகளுக்கும், வித்தியாசமான கதைகளுக்கும் வாய்ப்பு வழங்கி வருகிறது. ஜல்லிக்கட்டை பின்னணியாகக் கொண்ட 'பேட்டை காளி' இணைய தொடர் ஆஹா தமிழில் வெளியானது. இதனை இயக்கியவரும் அறிமுக இயக்குநர் தான். இதனைத் தொடர்ந்து 'ரத்த சாட்சி', 'உடன் பால்' என வித்தியாசமான படைப்புகள் ஆஹா தமிழ் டிஜிட்டல் தளத்தில் வெளியாகின. அந்த வரிசையில் தற்போது ஆஹா ஃபைண்ட் எனும் புதிய முயற்சியை தொடங்கி இருக்கிறோம்.

ஆஹா சிஇஓ ரவிகாந்த் பேசுகையில், "ஆஹா தமிழ் 2022ம் ஆண்டு ஏப்ரல் மாதம் தொடங்கப்பட்டது. அன்று முதல் இன்று வரை ஆஹா தமிழ் 'பேட்டை காளி', 'ரத்த சாட்சி', 'மாருதி நகர் போலீஸ் ஸ்டேஷன்', 'வேற மாதிரி ஆபீஸ்' உள்ளிட்ட வெற்றி பெற்ற படைப்புகளை வழங்கி இருக்கிறது. ஆஹா தமிழ் பொழுதுபோக்கு தளம் தமிழ் ரசிகர்களுக்கு பிடித்த படைப்புகளை வழங்கி வருகிறது. இதனுடைய அடுத்த கட்ட முயற்சியாக ஆஹா ஃபைண்ட் எனும் தளத்தை தொடங்கி இருக்கிறோம். ஆஹா தமிழ் டிஜிட்டல் தளம் புதிய திறமைசாலிகளுக்கு வாய்ப்புகளை வழங்கி வருகிறது. மேலும் அவர்களுடைய படைப்புகளை உலக அளவிலான ரசிகர்களுக்கு கொண்டு சேர்க்கிறது. ஆஹா ஃபைண்ட் தளத்தில் முதல் முயற்சியாக முதல் திரைப்படமாக சங்ககிரி ராஜ்குமார் இயக்கத்தில் உருவான 'பயாஸ்கோப்' வெளியிடப்படுகிறது. இதற்காக ஒத்துழைப்பு வழங்கிய புரொடியூசர் பஜார் நிறுவனத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் திரைப்படம் உலகம் முழுவதிலும் உள்ள தமிழர்களை கவரும்," என்றார்.

புரொடியூசர் பஜார் சிஇஓ ஜி கே திருநாவுக்கரசு பேசுகையில், "எங்கள் நிறுவனம் திரைப்படங்களை சந்தைப்படுத்தும் நிறுவனம். குறிப்பாக ஒரு திரைப்படத்தின் டிஜிட்டல் தள உரிமைகளை விற்பனை செய்து தரும் நிறுவனம்.□ இதனை நாங்கள் கடந்த இரண்டு ஆண்டுகளாக தொடர்ச்சியாக செய்து வருகிறோம். இயக்குநர் குழந்தை வேலப்பன் மூலமாக 'பயாஸ்கோப்' படத்தின் இயக்குநரான சங்ககிரி ராஜ்குமார் அறிமுகமானார். அதன் பிறகு பயோஸ்கோப் படத்தை பார்த்தோம். அந்த திரைப்படம் என்னை மிகவும் பாதித்தது. நானும் திரைப்படத்தை தயாரிப்பதிலும், சந்தைப்படுத்துவதிலும் வெற்றியையும், தோல்வியையும் கண்டதால் அந்தப் படத்துடன் நான் என்னை உணர்வுபூர்வமாக இணைத்துக் கொண்டேன். இந்த படத்தை என்னுடைய படமாக நினைத்து ஆதரவை தொடர்ந்து வழங்கினேன். அதன் பிறகு ஒரு முறை ஆஹா நிறுவனத்தை சேர்ந்த கவிதாவை சந்தித்தேன்.

அதன் பிறகு அவர்களுக்கு தொடர்ச்சியாக தொல்லை கொடுத்து இப்படத்தை பார்க்க வைத்தேன். அவர்கள் பார்த்தவுடன் படத்தை ஆஹாவில் வெளியிடுவதற்கு சம்மதம் தெரிவித்தார்கள். அதுமட்டுமில்லாமல் ஆஹா ஃபைண்ட் எனும் புதிய பிரிவை தொடங்கலாம் என்று தெரிவித்ததுடன் இல்லாமல் அதனை தொடங்கி, முதல் படமாக பயாஸ்கோப் படத்தை வெளியிடுகிறார்கள். இதற்காக அவர்களுக்கு இந்த தருணத்தில் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

பயாஸ்கோப் படத்தின் பார்ட் 2 உருவாக்க வேண்டாம் என இயக்குநர் சங்ககிரி ராஜ்குமாருக்கு வேண்டுகோள் விடுக்கிறேன். மற்றவர்கள் குறிப்பிடுவது போல் நீங்கள் வெவ்வேறு களங்களில், வெவ்வேறு தளங்களில் பயணிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் திரைப்படத்தை நாங்கள் முதலில் பத்து திரையரங்குகளில் திரையிடலாம் என திட்டமிட்டிருந்தோம். ஆனால் இப்படத்தின் டீசர் மற்றும் ட்ரெய்லர் வெளியான பிறகு 75 திரையரங்குகளில் வெளியிடுவதற்கான ஆதரவு கிடைத்திருக்கிறது. மேலும் இந்தத் திரைப்படத்திற்கு கூடுதல் ஆதரவு கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம். இந்த திரைப்படம் ஜனவரி மூன்றாம் தேதியன்று உலகம் முழுவதும் திரையரங்குகளில் வெளியாகிறது.

ஆகா ஃபைண்ட் டிஜிட்டல் தளத்தை தொடங்கி வைத்ததற்காக இயக்குநர் கே. பாக்யராஜ் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

சுயாதீன திரைப்படங்கள் தான் மக்களின் பிரச்சனையை பேசும் என்பதனை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறேன். சிறிய முதலீட்டு திரைப்படங்கள் தான் மக்களின் வாழ்வியலையும், மக்களின் துக்கங்களையும் பேசுகின்றன. சிறிய முதலீட்டு திரைப்படங்களை உருவாக்கும் போது தான் படைப்பாளிகளுக்கு மனநிறைவு கிடைக்கும் என நான் தொடர்ந்து சொல்லிக் கொண்டு வருகிறேன். உலகம் முழுவதும் சுயாதீன திரைப்படங்களுக்கு பெரிய வரவேற்பு கிடைத்து வருகிறது. உங்களிடம் நல்லதொரு கதை இருக்கிறதா, அதனை படமாக படைப்பாக உருவாக்குங்கள் என்றுதான் நான் புதுமுக இயக்குநர்களிடம் கேட்டுக்கொள்கிறேன். இதற்கான சந்தைப்படுத்துதல் என்பது கடினமாக இருந்தது. அதனை தற்போது புரொடியூசர் பஜார் மற்றும் ஆஹா ஃபைண்ட் சந்தைப்படுத்தும். அதனால் கவலைப்பட வேண்டாம். உற்சாகமாக பணியாற்றுங்கள். இவர்கள் என்னை எப்படி காப்பாற்றினார்களோ, அதே போல் அனைத்து புதுமுக படைப்பாளிகளையும் காப்பாற்றுவார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது.

வெங்காயம் படத்தினை வெளியிடுவதற்கு என்ன தடைகள் இருந்ததோ அதே தடைகள் பயாஸ்கோப் படத்திற்கும் இருந்தது.□ இந்தத் தருணத்தில் புரொடியூசர் பஜார் நிறுவனம் எங்களுக்கும், எங்களைப் போன்ற படைப்பாளிகளுக்கும் ஆஹா போன்ற டிஜிட்டல் தளங்களுக்கும் இடையே பாலமாக செயல்பட்டார்கள். இதனால் புரொடியூசர் பஜார் நிறுவனத்திற்கு என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆஹா ஃபைண்ட் தளத்தை புதிய இயக்குநர்களுக்காக உருவாக்கியதற்கு இந்நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரியான ரவிகாந்த் அவர்களுக்கு இந்த தருணத்தில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். பயாஸ்கோப் படத்தை தொடர்ந்து என்னுடைய இயக்கத்தில் உருவான இரண்டு திரைப்படங்கள் அடுத்தடுத்து விரைவில் வெளியாக உள்ளன, தொடர்ந்து ஆதரவளிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.' ' என்றார்.

# ரஜத் வர்மா மார்ச் 2025-ல் டிபிஎஸ் வங்கியின் இந்தியாவின் தலைமை செயல் அதிகாரியாக பொறுப்பேற்கிறார்



சென்னை, 31 டிசம்பர் 2024: டிசம்பர் 2024: இந்திய ரிசர்வ் வங்கியின் ஒப்புதலின்படி, திரு. ரஜத் வர்மாவை டிபிஎஸ் இந்தியா வங்கியின் தலைமைச் செயல் அதிகாரியாக (சிஇஓ) நியமிக்க இருப்பதாக டிபிஎஸ் வங்கி அறிவித்திருக்கிறது. இவரது நியமனம் 1 மார்ச் 2025 முதல் அமலுக்கு வருகிறது. இவ்வங்கியின் தலைமை செயல் அதிகாரியாக இருக்கும் திரு. சுரோஜித் ஷோம் 28 பிப்ரவரி 2025 அன்று ஓய்வுபெறுகிறார். இதையடுத்து டிபிஎஸ் இந்தியா வங்கியின் தற்போதைய இன்ஸ்டிடியூஷனல் பேங்கிங் க்ரூப் பிரிவின் தலைமை நிர்வாகியாக செயல்பட்டு வரும் திரு. ரஜத் வர்மா, தலைமை செயல் அதிகாரியாக பொறுப்பேற்க இருக்கிறார்.

2015-ல் டிபிஎஸ் இந்தியா வங்கியின் தலைமை நிர்வாக அதிகாரியாக நியமிக்கப்பட்டதிலிருந்து, திரு. ஷோம் இந்தியாவில் டிபிஎஸ் வங்கியின் கிளை செயல்பாடுகளை சிறப்பான முறையில் விரிவுபடுத்தியுள்ளார். 2016-ம் ஆண்டில் மொபைல் போன் மூலமாக மட்டுமே இயங்கும் இந்தியாவின் முதல் வங்கியாக டிஜிபேங்க்-ஐ டிபிஎஸ் இந்தியா வங்கி அறிமுகப்படுத்தியது. 2019-ல் இந்தியாவில் டிபிஎஸ் வங்கியின் முழுமையான கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரும் முயற்சியை முன்னெடுத்தார். இதன் தொடர்ச்சியாக 2020 -ல் லக்ஷ்மி விலாஸ் வங்கி டிபிஎஸ் இந்தியா வங்கியுடன் இணைந்து தனது செயல்படத் தொடங்கியது. இன்று 19 மாநிலங்களில் 350-க்கும் மேற்பட்ட நகரங்களில் செயல்பட்டு வருகிறது. மேலும், 2020 முதல் 2022 வரை இந்தியாவில் உள்ள உலகின் சிறந்த வங்கிகளின் ஃபோர்ப்ஸ் பட்டியலில், முதல் மூன்று இடங்களுக்குள் இடம் பிடித்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

நீண்ட கால ஆழ்ந்த அனுபவமிக்க ஒரு வங்கியாளராக திகழும் திரு. ரஜத் வர்மா, பரிவர்த்தனை வங்கி, நிதி நிறுவனங்கள், நிலையான நிதி, மைக்ரோ மற்றும் சிறு, நடுத்தர நிறுவனங்களுக்கான வங்கி மற்றும் கிளை வங்கி உட்பட தனிநபர் வாடிக்கையாளர் மற்றும் பெருநிறுவன வங்கிப் பிரிவில் 27 ஆண்டு கால அனுபவம் உள்ளவர்.

ஜூன் 2023-ல் இன்ஸ்டிடியூஷனல் பேங்கிங் க்ரூப் தலைமை நிர்வாகியாக டிபிஎஸ் வங்கியில் சேர்ந்ததிலிருந்து, அவர் அனைத்து நிறுவன வாடிக்கையாளர் பிரிவுகளிலும் வங்கி வணிகத்தை சிறப்பாக வளர்ச்சிப் பெற செய்திருக்கிறார். தற்போதுள்ள பெருநிறுவன உறவுகளை மேலும் நெருங்கிய உறவாக மேம்படுத்துதல், புதிய வாடிக்கையாளர்களை தங்களது சேவைகளில் இணைப்பதை துரிதப்படுத்துதல் மற்றும் வளர்ச்சி அடைய வாய்ப்புகள் அதிகமுள்ள அம்சங்களில் புதிய வாய்ப்புகளை அடையாளம் காணுதல் போன்றவற்றை முன்னெடுத்திருப்பதன் மூலம் இந்த வளர்ச்சியை எட்டியிருக்கிறது டிபிஎஸ் இந்தியா வங்கி.

இவரது தலைமையின் கீழ், 2024-ம் ஆண்டில் க்ளோபல் ஃபைனான்ஸ் டிபிஎஸ் வங்கியை இந்தியாவில் நிலையான நிதிக்கான சிறந்த வங்கியாக அடையாள கண்டு அங்கீகரித்திருக்கிறது. இவர் டிபிஎஸ் வங்கியில் இணைந்து பணியாற்றுவதற்கு முன்பு, ஹெச்.எஸ்.பி.சி. இந்தியா வங்கியின் நிர்வாக இயக்குநர் மற்றும் வணிக வங்கி சேவைப் பிரிவின் தலைமை நிர்வாகியாக பணியாற்றினார்.

டிபிஎஸ் தலைமை நிர்வாக அதிகாரி திரு. பியூஷ் குப்தா கூறுகையில், "கடந்த 30 ஆண்டுகளாக இந்தியா, டிபிஎஸ்ஸின் முக்கிய சந்தையாக இருந்து வருகிறது. கடந்த பத்து ஆண்டுகளாக சுரோஜித்தின் தலைமையில், டிபிஎஸ் இந்தியா நிறுவன வங்கி, செல்வ பராமரிப்பு மற்றும் சில்லறை வர்த்தகம் என பல்வேறு பிரிவுகளில் ஒரு முழுமையான சேவை தளமாக வளர்ச்சிக் கண்டுள்ளது இன்று டிபிஎஸ் இந்தியா வங்கியை வலுவான கிளை செயல்பாடுகளுடன் வளர்ச்சியடைய செய்ததில், திரு. சுரோஜித் அவர்கள் கொண்டிருந்த உறுதிமிக்க தொலை நோக்குப் பார்வையும், அயாராது காட்டிய அர்ப்பணிப்பும் முக்கியப்பங்கு வகிக்கின்றன. அதற்கு நாங்கள் அவருக்கு நன்றி கூறக் கடமைபட்டு இருக்கிறோம். 18 மாதங்களுக்கு முன்பு எங்களுடன் இணைந்ததில் இருந்து, ஆழ்ந்த நிபுணத்துவமுடன் கூடிய வங்கி அனுபவமுள்ள ரஜத், எங்களது இந்திய இன்ஸ்டிடியூஷனல் பேங்கிங் க்ரூப் வணிகத்தை வலுவான ஒன்றாக விரிவுப்படுத்தியிருக்கிறார். எங்களது வலிமைமிக்க செயல்பாட்டு தளத்துடன், வரும் ஆண்டுகளில் இந்தியாவின் வளர்ச்சிப் பயணத்தில் தொடர்ந்து பங்கேற்கும் வகையில் டிபிஎஸ் இந்தியா வங்கி அதற்குரிய உரிய இடத்தில் இயங்கி வருகிறது. மேலும் ரஜத் அவர்கள் தான் சாதித்த அம்சங்களை மேம்படுத்துவதோடு, எங்களது வணிக செயல்பாடுகளை அடுத்தக்கட்ட த்திற்கு அழைத்துச் செல்வார் என நாங்கள் உறுதியாக நம்புகிறோம்'' என்றார்.

# ஆண்டின் கடைசி நாளில் தங்கம் சவரனுக்கு ரூ.320 குறைவு

சென்னை, 31 டிசம்பர் 2024: 2024 ஆண்டின் இறுதி நாளில் சென்னையில் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.320 குறைந்துள்ளது.

சர்வதேச அளவில் நிலவும் பொருளாதார சூழல், அமெரிக்க டாலருக்கு எதிரான இந்திய ரூபாயின் மதிப்பு ஆகியவற்றின் காரணமாக ஆபரணத் தங்கத்தின் விலையில் மாற்றம் நிகழ்கிறது.

தங்கம் விலை இந்த ஆண்டு தொடக்கத்தில் இருந்து ஏற்ற, இறக்கத்துடன் காணப்பட்ட நிலையில், கடந்த அக்டோபர் மாதம் 30-ம் தேதி ஒரு சவரன் ரூ.59 ஆயிரத்தை கடந்து புதிய உச்சம் பெற்றது. அதனை தொடர்ந்து தங்கம் விலை ஏற்ற, இறக்கத்துடன் காணப்பட்டு வருகிறது. நேற்று தங்கம் விலை சவரனுக்கு ரூ.57,200க்கு விற்பனை செய்யப்பட்ட நிலையில் இந்தாண்டின் கடைசி மாதத்தின் கடைசி நாளான இன்று தங்கம் விலை குறைந்துள்ளது.

22 காரட் ஆபரணத் தங்கம் சவரனுக்கு ரூ.320 குறைந்து ஒரு சவரன் ரூ.56,880க்கு விற்கப்படுகிறது. ஒரு கிராம் தங்கம் ரூ. 40 குறைந்து ரூ.7,110 ஆக இருக்கிறது.

வெள்ளி விலை கிராமுக்கு ரூ.2 குறைந்து ஒரு கிராம் ரூ.98-க்கு விற்பனை செய்யப்படுகிறது. ஒரு கிலோ வெள்ளி ரூ.98 ஆயிரத்துக்கு விற்கப்படுகிறது.

# முத்தூட் பாப்பச்சன் குழுமத்தின் நான்காம் தலைமுறைத் தலைவர்கள் நிர்வாக வாரியத்தில் இணைகின்றனர்

சென்னை, 31 டிசம்பர் 2024: முத்தூட் ப்ளூ என்று பரவலாக அங்கீகரிக்கப்பட்ட 137 ஆண்டுகால இந்திய வணிக நிறுவனமான முத்தூட் பாப்பச்சன் குழுமம் (எம் பி ஜி) ஆனது அதன் நான்காவது தலைமுறை தலைவர்களை நிர்வாக வாரிய இயக்குநர்கள் குழுவில் சேர்ப்பதை அறிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறது. எம் பி ஜி இன் பாரம்பரியத்தை அடுத்த தலைமுறையினரும் தொடர்கின்றனர். தற்போதைய தலைமைக் குழுவில் இணைபவர்கள், பழைய பாரம்பரியத்தைப் பாதுகாக்கும் அதே வேளையில் குழுவின் எதிர்காலத்தைப் பாதுகாப்பதில் ஒரு குறிப்பிடத்தக்க பணியை மேற்கொள்வார்கள். 1887 ஆம் ஆண்டு திரு. நினன் மத்தாய் முத்தூட் அவர்களால் நிறுவப்பட்ட இந்தக் குழு, அதன் நிறுவன மதிப்புகளுக்கு உண்மையாகவே இருந்து. தவிர, வாடிக்கையாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருகிறது. இந்தத் தலைமைத்துவ விரிவாக்கத்திற்கான முன்மொழிவு இந்திய ரிசர்வ் வங்கியால் (ஆர் பி ஐ) அங்கீகரிக்கப்பட்டுள்ளது. அதைத் தொடர்ந்து அந்தந்த நிறுவனங்களின் வாரியங்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

அடுத்த தலைமுறைத் தலைவர்களான டினா ஜார்ஜ் முத்தூட், தாமஸ் முத்தூட் ஜான் மற்றும் சுசன்னா முத்தூட் ஆகியோர் முறையே முத்தூட் கேபிடல் சர்வீசஸ், முத்தூட் மைக்ரோஃபின் மற்றும் முத்தூட் ஹவுசிங் ஃபைனான்ஸில் நிர்வாக இயக்குநர்களாகப் பொறுப்பேற்றுள்ளனர்.

ரிது ஜார்ஜ் முத்தூட் மற்றும் சூசன் ஜான் முத்தூட் ஆகியோர் முத்தூட் கேபிடல் சர்வீசஸில் நிர்வாகமற்ற இயக்குநர்களாக இணைந்துள்ளனர்.

முத்தூட் சர்வதேச விளையாட்டுப் பள்ளியின் இயக்குநராக ஹன்னா முத்தூட் இணைவார். இந்தப் பள்ளி, இங்கிலாந்தின் ப்ரூக் ஹவுஸ் கல்லூரியுடன் இணைந்து, உலகத் தரம் வாய்ந்த கல்வியாளர்களை கால்பந்து, பேட்மிண்டன் மற்றும் கைப்பந்து ஆகியவற்றில் உயர் நிலைப் பயிற்சியுடன் இணைத்து, எதிர்கால விளையாட்டு நட்சத்திரங்களை வடிவமைக்க அதிநவீன வசதிகள் மற்றும் கேம்பிரிட்ஜ் பாடத்திட்டத்தை வழங்குகிறது.

எம் பி ஜி-யின் வளர்ச்சிப் பயணத்தில் புதிய யோசனைகளையும் ஆற்றலையும் புகுத்த அனைவரும் தயாராக உள்ளனர். முத்தூட் பாப்பச்சன் குடும்பத்தின் நான்காவது தலைமுறை உறுப்பினர்களாக, அவர்கள் ஆரம்ப ஆண்டுகளில் கடுமையாகத் தயாராக உள்ளனர். இந்த நேரடி அனுபவம் குழுவின் பல்வேறு நிறுவனங்களுக்குள் தொடக்க நிலை பதவிகளில் தொடங்கி நடுத்தர மேலாண்மைப் பாத்திரங்கள் வழியாக முன்னேறியது. பல ஆண்டுகளாக, அவர்கள் விரிவான நடைமுறை அனுபவத்தையும் குழுவின் மதிப்புகள் மற்றும் செயல்பாடுகள் பற்றிய ஆழமான புரிதலையும் பெற்றுள்ளனர், இதனால் தற்போதைய தலைமுறை இயக்குநர்களுடன் இணைந்து வழிநடத்த அவர்களை நன்கு தயார்படுத்தியுள்ளனர்.

அனுபவம் வாய்ந்த தற்போதைய தலைமைக்கும் நான்காவது தலைமுறைக்கும் இடையிலான இந்த ஒத்துழைப்பு எம் பி ஜி இன் அடுத்த கட்ட புதுமை மற்றும் விரிவாக்கத்தை முன்னெடுத்துச் செல்லும் என்று உறுதியளிக்கிறது. வலுப்படுத்தப்பட்ட தலைமைத்துவக் குழு, குழுவின் நாடு தழுவிய இருப்பை மேம்படுத்துவதிலும், முத்தூட் ஃபின்கார்ப் (முதன்மை நிறுவனம்), முத்தூட் கேபிடல் சர்வீசஸ், முத்தூட் மைக்ரோஃபின், முத்தூட் ஹவுசிங் ஃபைனான்ஸ் மற்றும் பிற குழு நிறுவனங்கள் உள்ளிட்ட முக்கிய துறைகளில் வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட தயாரிப்புகளை வழங்குவதிலும் கவனம் செலுத்தும்.

நாடு தழுவிய 5,200 க்கும் மேற்பட்ட கிளைகள் மற்றும் 40,000 க்கும் மேற்பட்ட ஊழியர்களைக் கொண்ட வலையமைப்புடன், எம் பி ஜி ஆனது நிதி சேவைகளில் ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. வாடிக்கையாளர்களின் வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்ய பரந்த அளவிலான தனிப்பயனாக்கப்பட்ட தயாரிப்புகளை வழங்குகிறது. ஹாஸ்பிடாலிட்டி, ஆட்டோமோட்டிவ், ரியால்டி, ஐடி சேவைகள், விலைமதிப்பற்ற உலோகங்கள் மற்றும் மாற்று எரிசக்தி உள்ளிட்ட பல்வேறு துறைகளில் குழுமத்தின் விரிவாக்கம், பாரம்பரிய மற்றும் டிஜிட்டல் தீர்வுகள் மூலம் மதிப்பை இயக்கி, பல்வேறு தொழில்களில் தொடர்ந்து முன்னணியில் இருக்க வைக்கிறது.

முத்தூட் பாப்பச்சன் குழுமம் மற்றும் முத்தூட் ஃபின்கார்ப் நிறுவனத்தின் தலைவரான தாமஸ் ஜான் முத்தூட் பகிர்ந்து கொண்டார்: "நான்காவது தலைமுறை தலைவர்களை வாரியத்திற்கு வரவேற்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். கடந்த பத்தாண்டுகளில், அவர்கள் நிறுவனத்திற்கு வெளியே பணியாற்றி விலைமதிப்பற்ற அனுபவத்தைப் பெற்றுள்ளனர், பின்னர் எம் பி ஜி-க்குள் அடித்தளப் பாத்திரங்களில் தங்கள் பயணத்தைத் தொடங்கினர். இந்த அணுகுமுறை அவர்களுக்கு எங்கள் செயல்பாடுகள் மற்றும் மதிப்புகள் பற்றிய நன்கு புரிந்துகொள்ளுதலை வழங்கியுள்ளது. தற்போதுள்ள தலைமையுடன் அவர்களின் ஒருங்கிணைப்பு எம் பி ஜி-யின் வரலாற்றில் ஒரு வரையறுக்கப்பட்ட தருணமாகும். அவர்களின் புதுமையான யோசனைகள் மற்றும் புதிய ஆற்றல், எங்கள் மரபு மீதான மரியாதையுடன் இணைந்து, குழுவை இன்னும் பெரிய சாதனைகளை நோக்கி வழிநடத்தும் என்று நான் நம்புகிறேன்."

முத்தூட் பாப்பச்சன் குழுமத்தின் இயக்குனர் தாமஸ் ஜார்ஜ் முத்தூட் மேலும் கூறியதாவது: "அடுத்த தலைமுறைத் தலைவர்களின் விரிவான மற்றும் கட்டமைக்கப்பட்ட வணிக அறிமுகம், இன்றைய மாறும் சந்தையை வழிநடத்தத் தேவையான திறன்களையும் நுண்ணறிவையும் அவர்களுக்கு வழங்கியுள்ளது. அவர்களின் புதிய யுகக் கண்ணோட்டமும் அர்ப்பணிப்பும், எங்கள் தற்போதைய தலைமையின் அனுபவத்துடன் இணைந்து, எம் பி ஜி தொடர்ந்து மாறிவரும் நிலப்பரப்பில் தகவமைத்து, செழித்து, புதுமைகளை உருவாக்குவதை உறுதி செய்யும்."

முத்தூட் பாப்பச்சன் குழுமத்தின் இயக்குனர் தாமஸ் முத்தூட் கூறியதாவது: "எங்கள் புதிய தலைவர்கள் எங்கள் வளர்ச்சிக் கதையை முன்னோக்கி நகர்த்தத் தயாராக உள்ளனர். புதிய தலைமுறை வாடிக்கையாளர்களுடன் இணைவதற்கான அவர்களின் திறனும், நவீன நிதி தீர்வுகளில் அவர்களின் நிபுணத்துவமும் எம் பி ஜி சுறுசுறுப்பாகவும், புதுமையாகவும், நாளைய காலத்திற்குப் பொருத்தமானதாகவும் இருப்பதை உறுதி செய்யும், அதே நேரத்தில் எங்கள் வாடிக்கையாளர்கள் மற்றும் சமூகங்களை மேம்படுத்துவதற்கான எங்கள் முக்கிய நோக்கத்திற்கு உண்மையாக இருக்கும்." என்றார்.

# ஒரே மாதத்தில் 3வது முறையாக ஐஆர்சிடிசி இணையதளம் முடங்கியது

சென்னை, 31 டிசம்பர் 2024: ஐ ஆர் சி டி சி இணையதளம் இன்று காலை முடங்கியதால் தட்கல் டிக்கெட் எடுக்க முடியாமல் பயணிகள் அவதி அடைந்தனர்.

ரெயில் டிக்கெட் முன்பதிவு செய்யும் இந்திய ரெயில்வேயின் ஐ ஆர் சி டி சி இணையத்தளம் ஒரே மாதத்தில் 3வது முறையாக முடங்கியுள்ளது.

புத்தாண்டையொட்டி அதிக வெப் டிராபிக் காரணமாக இந்திய ரயில்வே கேட்டரிங் மற்றும் டூரிசம் கார்ப்பரேஷன் (ஐ ஆர் சி டி சி) இணையதளம் மற்றும் மொபைல் செயலி முடங்கியது. இதனால் டிக்கெட் எடுக்கும் பயணிகள் சிரமத்துக்கு உள்ளாகினர். பல பயனர்கள் இணையதளத்தில் உள்நுழைய முடியவில்லை, மேலும் உள்நுழைய முடிந்தவர்கள் தங்கள் டிக்கெட்டுகளை முன்பதிவு செய்ய முடியவில்லை.

காலை 10 மணிக்கு பயணிகள் தட்கல் டிக்கெட்டுகளை முன்பதிவு செய்ய முயன்றபோது இந்த செயலிழப்பு ஏற்பட்டது. இதனைத்தொடந்து பல பயனர்கள் சமூக ஊடகங்களில் தங்கள் அதிருப்தியை வெளிப்படுத்தினர். @RailMinIndia ஐ ஆர் சி டி சி இணையதளம் இன்று காலை 10 மணி முதல் செயல்படவில்லை, என்னால் தட்கல் டிக்கெட்டுகளை முன்பதிவு செய்ய முடியவில்லை என்று ஒரு பயணி சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ளார்.

தட்கல் முன்பதிவு-கிளாசிக் நேரத்திற்கு சற்று முன் ஐஆர்சிடிசி செயலிழந்தது என்று மற்றொரு பயணி எக்ஸ் தளத்தில் ஸ்க்ரீன் ஷாட்களை பகிர்ந்தார். இந்நிலையில் தட்கல் நேரம் கடந்த பின்னர் ஐஆர்சிடிசி மீண்டும் செயல்படத் தொடங்கியுள்ளது.

# சென்னை புத்தகக் கண்காட்சியிலுள்ள அமெரிக்கன் சென்டர் பூத் என்பது வாய்ப்புக்கான நுழைவாயிலாகத் திகழ்கிறது



சென்னை, 31 டிசம்பர் 2024: சென்னையிலுள்ள அமெரிக்கன் சென்டர், ஒய் எம் சி ஏ நந்தனத்தில் 48வது சென்னை புத்தகக் கண்காட்சியில் அமெரிக்கன் சென்டர் பூத்தை அமைத்துள்ளது. எங்களது விரிவான புத்தக மற்றும் இதர வள தொகுப்புகளை பார்வையிட, ஸ்டால் எண் எஃப்-51க்கு வருகை தரவும். புத்தகக் கண்காட்சி ஜனவரி 12, 2025 வரை நடைபெறுகிறது.

அமெரிக்காவின் உண்மையான மனப்பாங்கு, வாய்ப்பு மற்றும் வாக்குறுதியை வெளிப்படுத்தும் புதுமையான, அனைவரையும் உள்ளடக்கிய, மற்றும் நிலைமாற்றமளிக்கும் உரையாடல்கள், மற்றும் நிகழ்ச்சிகள் மூலம் அடுத்த தலைமுறையைச் சேர்ந்த இந்திய மற்றும் அமெரிக்க மாற்றம்-உருவாக்குபவர்களுக்கு சவால்களை அளிப்பதுடன், ஊக்கமும் அதிகாரமும் அளிப்பதை அமெரிக்கன் சென்டர் நோக்கமாகக் கொண்டுள்ளது.

சென்னையிலுள்ள அமெரிக்க நடப்பு துணைத் தூதர் க்வென்டோலின் லெவெல்லின் அமெரிக்கன் சென்டர் பூத்தை இன்று துவக்கி வைத்து உரையாற்றுகையில் கூறியதாவது: "அமெரிக்கன் சென்டர் புத்தகக் கண்காட்சியில் பங்கேற்பது, புதுமை உருவாக்கங்களையும் படைப்பாற்றலையும் தூண்டுவதில் இலக்கியம் மற்றும் தகவல்களின் நிலைமாற்றும் சக்தியை எடுத்துக்காட்டுவதாக அமைகிறது." மேலும் அவர் கூறியது: "அனுமானங்களைக் கேள்விக்குட்படுத்தவும், விமர்சன ரீதியாகச் சிந்திக்கவும், புரிதலை வளர்க்கவும், உலகில் அர்த்தமுள்ள தாக்கத்தை ஏற்படுத்த தனித்துவமான கருதுகோள்களைப் பயன்படுத்தவும் இந்தியா மற்றும் அமெரிக்காவைச் சேர்ந்த மாற்றம்-உருவாக்குபவர்களுக்கு அதிகாரம் அளிப்பதில் நாங்கள் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டுள்ளோம்."

அமெரிக்கன் சென்டர் பூத், மாணவர்கள், நிபுணர்கள், ஆராய்ச்சியாளர்கள், ஆசிரியர்களுக்கு வள ஆதாரங்களையும் பிரத்யேகத் திட்டங்களையும் வழங்கி, அமெரிக்காவில் கல்வி மற்றும் பரிமாற்ற வாய்ப்புகளைக் காட்சிப்படுத்துகிறது. அமெரிக்கன் சென்டர் பூத்திற்கு வருகை தருவோர் தள்ளுபடி கட்டணத்தில் உறுப்பினர் ஆகலாம் மற்றும் ஈ லைப்ரரி யூ எஸ் ஏ ஒரியன்டேஷனையும் பெறலாம்.

சென்னையில் உள்ள அமெரிக்க துணைத் தூதரகத்தில் உள்ள அமெரிக்கன் சென்டரின் நூலகம் 15,000-க்கும் மேற்பட்ட புத்தகங்கள் மற்றும் விரிவான மல்டிமீடியா மின்-வள ஆதாரங்களை உள்ளிட்ட பன்முகத்தன்மையுள்ள சேகரிப்பைக் கொண்டுள்ளது. அமெரிக்கன் சென்டரின் உறுப்பினர்கள் செய்தி இதழ்கள், பத்திரிகைகள், செய்தித்தாள்கள், ஆய்வுக் கட்டுரைகள், மற்றும் வீடியோக்கள் போன்ற வள ஆதாரங்களை உள்ளிட்ட ஏராளமான வணிக தரவுத்தளங்களைக் கொண்ட டிஜிட்டல் நூலகமான ஈ லைப்ரரி யூ எஸ் ஏ-க்கான பிரத்யேகமான தனிப்பயனாக்கப்பட்ட அணுகலைப் பெறலாம்.

புகைப்படத் தலைப்பு: 48வது சென்னைப் புத்தகக் கண்காட்சி 2025-இல் அமெரிக்கன் சென்டர் பூத்தை, சென்னையிலுள்ள அமெரிக்க நடப்பு துணைத் தூதர் க்வென்டோலின் லெவெல்லின், டிசம்பர் 27, 2024 வெள்ளிக்கிழமை திறந்து வைத்தார்.

# சென்னையில் போராட்டம் நடத்த முயற்சி: காரில் இருந்து இறங்கியபோது சீமான் கைது



சென்னை, 31 டிசம்பர் 2024: அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை சம்பவத்தை கண்டித்து சென்னையில் போராட்டம் நடத்த முயன்ற நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கைது செய்யப்பட்டார்.

சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் மாணவி ஒருவர் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்ட சம்பவம் தமிழகம் முழுவதும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இது தொடர்பாக, ஞானசேகரன் என்பவரை போலீசார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த சம்பவத்திற்கு கண்டனம் தெரிவித்து, அண்ணா தி.மு.க., உள்ளிட்ட பல கட்சிகள் போராட்டத்தில் குதித்தன. போராட்டம் நடத்திய பா.ஜ.,வினரும் கைது செய்யப்பட்டனர்.

இந்நிலையில், இன்று அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை சம்பவத்தை கண்டித்து சென்னையில் போராட்டம் நடத்துவோம் என நாம் தமிழர் கட்சி தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் அறிவித்து இருந்தார். அதன்படி, இன்று காலை 10 மணிக்கு வள்ளுவர் கோட்டத்தில் நடப்பதாக இருந்த ஆர்ப்பாட்டத்துக்கு போலீசார் அனுமதி மறுத்தனர். ஆனால் தடையை மீறி போராட்டம் நடத்த கட்சி நிர்வாகிகளுக்கு சீமான் அழைப்பு விடுத்திருந்தார்.

இதையடுத்து, சம்பவ பகுதியில் கூடுதல் போலீசார் குவிக்கப்பட்டு இருந்தனர். சீமான் அழைப்பை தொடர்ந்து போராட்ட களத்தில் நாம் தமிழர் கட்சியினர் கூடினர். அப்போது அங்கு பாதுகாப்பு பணியில் இருந்த போலீசார் அவர்களை கைது செய்தனர். போலீசாரின் கைது நடவடிக்கை ஒரு பக்கம் நடந்து கொண்டிருக்க, அங்கே கட்சியின் முன்னணி நிர்வாகிகளுடன் சீமான் காரில் வந்தார். பின்னர் காரில் இருந்து இறங்கி போராட்டக்களம் நோக்கி செல்ல முயன்ற அவரை போராட அனுமதி இல்லை என்று கூறி போலீசார் கைது செய்தனர்.

முன்னதாக, போராட்ட களத்திற்கு வந்த சீமான் காரில் இருந்த படியே நிருபர்களிடம் கூறுகையில், 'ஒரு பத்திரிகையாளரையே சந்திக்க விடவில்லை என்றால் எப்படி? எதற்கு போராட வந்து இருக்கிறேன் என்று கூட சொல்ல விட மறுக்கின்றனர். அறவழியில் போராட கூட தமிழக அரசு அனுமதி அளிக்கவில்லை' என குற்றம்சாட்டினார்.